# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்


எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

......

மனு எண். 063/நகராட்சி/2019

நாள் : 12/04/2019

திரு அ. திருவரங்கம், - முறையீட்டு மனுதாரர்
ஆர்காடு – 632 503.

வேலூர் மாவட்டம், ஆற்காடு, கதவு எண்.3A/11, பாஷா தெரு முகவரியில் வசிக்கும் திரு அ. திருவரங்கம் அவர்களின் 08.04.2019 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 063/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டுக் கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

வேலூர் மாவட்டம், ஆற்காடு, கதவு எண்.3A/11, பாஷா தெரு முகவரியில் வசிக்கும் திரு அ. திருவரங்கம் என்பவர், தனது 27.01.2017 நாளிட்ட முறையீட்டு மனு சம்பந்தமாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் பிறப்பித்த 20.05.2017 நாளிட்ட ஆணை எண்.130/2017–ஐ மறுபரிசீலனை செய்து, அவ்வாணையினை இரத்து செய்யக் கோரி மேல்முறையீடு செய்துள்ளார்.

2. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் மற்றும் அச்சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளில், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் பிறப்பித்த ஆணையொன்றினை மறுபரிசீலனை செய்யக் கோரும் மேல்முறையீட்டு மனுவினை ஏற்பதற்கு வழிவகை செய்யப்படவில்லை. எனவே, முறையீட்டு மனுதாரரின் மேல்முறையீட்டு மனுவினை ஏற்பதற்கில்லை எனத் தெரிவித்து, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 12–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

16.4.19

16/4/19

பெறுநர்

1. திரு அ. திருவரங்கம்,
   கதவு எண்.3 A/11, பாஷா தெரு,
   ஆர்காடு – 632 503
   வேலூர் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
   ஆற்காடு நகராட்சி,
   ஆற்காடு,
   வேலூர் மாவட்டம்

நகல்: முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி